<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.</u>

<u>நாள்.18.07.2025</u>

<u>O.S. No.26/2023</u>

<u>வா.சா.1</u> – வேலாயுத கோனார்

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

என்ன வேலை பார்க்கிறேன் என்றால் கூலி வேலை. பிரதிவாதி வேன், ஆட்டோ வைத்துள்ளார் என்றால் சரிதான். எனக்கு விவசாய வேலை உண்டு என்றால் சரியல்ல. என்னால் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.1 புரோநோட் எழுதப்பட்டதா என்றால் ஆமாம் பிரதிவாதியே எழுதிக்கொடுத்தார். என்னால் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.1 புரோநோட்டில் உள்ள சாட்சிகள் யார் என்றால் கருப்பையா மட்டும்தான் சாட்சி கையொப்பம் போட்டார் வேறு யாரும் போடவில்லை. எந்த தேதியில் பிரதிவாதி என்னிடம் எவ்வளவு வாங்கினார் என்றால் தேதி ஞாபகமில்லை 3 வருடத்திற்கு முன்பாக வாங்கினார் முதலில் ரூ.40000/- வாங்கினார் பின்னர் அப்பா இறந்தபோது ரூ.20000/- எனது வீட்டுக்கு வந்து வாங்கி சென்றார். கடன் வாங்கும்போது வாதி மட்டும் தான் வந்தாரா என்றால் ஆமாம். என்னால் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.1 புரோநோட்டில் எதற்காக கடன் வாங்கினார் என்ற விவரம் உள்ளதா என்றால் இல்லை. பிரதிவாதி எவ்வளவு வட்டி கொடுத்தார் என்றால் 2 மாதங்கள் தலா ரூ.300/- வட்டியாக கொடுத்தார். மேற்படி தொகை ரூ.600/ஐ என்னால் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.1 புரோநோட்டில் வரவு வைத்தேன் என்றால் இல்லை. பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பினேன் அதை பிரதிவாதி வாங்கிவிட்டார். வாதி என்னால் அனுப்பப்பட்ட அறிவிப்பை வாங்கவில்லை என்னால் அஞ்சலக ஒப்புதல் அட்டை எதுவும் வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 அறிவிப்பில் ஆட்டோ வாங்கிய கடன் அடைக்கவும், மேலும் பழுது பார்க்கவும் அவசர நிமித்தம் காரணம் என சொல்லியுள்ளேன் ஆனால் வா.சா.ஆ.1ல் மேற்படி விவரம் இல்லை என்றால் சரியல்ல.

பிரதிவாதி வா.சா.ஆ.1ல் கையொப்பம் போடவில்லை வா.சா.ஆ.1 மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதி கடன் வாங்காததால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**மறுவிசாரணை இல்லை.**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.07.18 18:32:26 +0530